# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் 05.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 4583/SCIC/2023</u>**

திரு இரா. அன்பரசு — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்டபதிவாளர் அலுவலகம்,
சிதம்பரம்.

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
மன்னார்குடி, கடலூர் மாவட்டம்.

--- பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
1 எண் இணை சார்பதிவாளர்,
1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம்,
சிதம்பரம்.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 19.12.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிதம்பரம் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். காட்டுமன்னார் கோவில் தாலூகா செட்டித்தாங்கல் மதுரா கண்டமங்கலம் கிராமம் நத்தம் சர்வே எண்.60/10ல் அலுவலக ஆவணங்களின் படி விற்றவர் மற்றும் வாங்கியவர் பெயர், நாள் மாதம் ஆண்டுவாரியாக தற்போது வரையுள்ள விஸ்தீரணம் உட்பட தகவல்கள் என்பது போன்ற விவரங்களை 3 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 11.01.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 30.01.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் 02.02.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 13.03.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 4583/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 24.05.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 10.10.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 05.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி R. தனலட்சுமி, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டபதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிதம்பரம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் 19.12.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அத்தகவல்களைப் பெற்றுக்கொண்டு மனுதாரர் மனநிறைவுக் கடிதத்தினை அளித்துள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. மனுதாரரும் சிதம்பரம் மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அவர்களால் வழங்கப்பட்ட தகவல்கள் தனக்கு திருப்திகரமானதாகவும், முழு மனநிறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்து ஆணையத்திற்கு கடிதம் அளித்துள்ள நிலையில், **இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4583/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்டபதிவாளர் அலுவலகம்,
சிதம்பரம்.

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
மன்னார்குடி, கடலூர் மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
1 எண் இணை சார்பதிவாளர்,
1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம்,
சிதம்பரம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு இரா. அன்பரசு,
த/பெ மா. இராமசாமி,
1151 செல்வ விநாயகர் கோவில் தெரு,
விபீஷ்ணபுரம், அம்மாபேட்டை,
சிதம்பரம் தாலூகா 608 401

Copy to: File TK/PS